# திருப்புதல் தேர்வு - 2

**பாடம் : தமிழ்** **மதிப்பெண்கள்: 30**
**வகுப்பு: 8** **நாள்:13.03.24**

**I. பின்வரும் உரை நடைப் பகுதியைப் படித்து கொடுக்கப்பட்ட வினாக்களுக்கேற்ற விடை எழுதுக.** (5x1=5)

மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகள் உணவு, உடை, உறைவிடம் இவற்றுள் முதலிரண்டும் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை வேளாண்மையோ நீரை அடிப்படையாகக் கொண்டது. மழை நீர், ஆற்று நீர், ஊற்று நீர் ஆகியவற்றைச் சிறிய, பெரிய நீர்நிலைகளில் சேகரிக்க வேண்டும். அதனை வேளாண்மைக்குப் பயன்படுத்த வேண்டும் என்பதை நம் முன்னோர்கள் திட்டமிட்டுச் செய்தனர். ஒவ்வொரு வட்டாரத்தின் நில அமைப்பு, மண்வளம், மக்கள்தொகை ஆகியவற்றை கருத்தில் கொண்டே நீர்நிலைகளை வடிவமைத்தனர். இதில் ஏரிகளும் குளங்களும் பாசனத்திற்கான அமைப்புகளாய்ப் பெருமளவில் பயன்பட்டன. பாண்டி மண்டலத்து நிலப் பகுதியில் ஏரியை 'கண்மாய்' என்று அழைப்பர். கம்மாய் என்பது வட்டார வழக்குச் சொல்லாகும். மணற்பாங்கான இடத்தில் தோண்டிச் சுடுமண் வளையமிட்ட கிணற்றுக்கு 'உறைக்கிணறு' என்றும் மக்கள் பருகு நீர் உள்ள நீர்நிலைக்கு 'ஊருணி' என்றும் பெயர் சூட்டியுள்ளனர்.

**வினாக்கள்:**

1. மனித வாழ்வின் அடிப்படைத் தேவைகளில் வேளாண்மையை ஆதாரமாகக் கொண்டவை எவை?

   அ) உணவு, வீடு ஆ) ஆடை, உறைவிடம் இ) உணவு, உடை

2. பாசனத்திற்கான அமைப்புகளாய் ______, _________ பெருமளவில் பயன்பட்டன.

   அ) கடலும் நதிகளும் ஆ) ஏரிகளும் கடலும்
   இ) ஏரிகளும் குளங்களும்

3. _________ மண்டலத்து நிலப்பகுதியில் ஏரியைக் கண்மாய் என்று அழைப்பர்.

   அ) சோழ ஆ) தஞ்சை இ) பாண்டி

4.மக்கள் பருகு நீர் உள்ள நீர் நிலைக்கு _________ என்றும் பெயர் சூட்டினார்.

அ) கண்மாய் ஆ) ஊருணி இ) உறைக்கிணறு

5. கம்மாய் என்பது ________ வழக்குச் சொல்லாகும்.

அ) வட்டார ஆ) கிராமம் இ) மண்டலம்

**II. பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (4x3=12)**

1. திராவிட மகாஜன சங்கம் எவற்றுக்காகப் போராடியது?
2. அயோத்திதாசரின் இதழ்ப் பணி பற்றி எழுதுக.
3. எம்.ஜி.ஆரின் சமூக நலத்திட்டங்களைப் பற்றி எழுதுக.
4. தமிழ்மொழியின் வளர்ச்சிக்காக எம்.ஜி.ஆர் ஆற்றிய பணிகள் யாவை?

**IV. பின்வரும் காட்சியைக் கண்டு கவினுற எழுதுக. (1x3=3)**

1.



**V. பால் மனம் கதையைச் சுருக்கி எழுதுக. (1x5=5)**

**VI. கடிதம் எழுதுக. (1x5=5)**

1. உமது பகுதியில் மின்விளக்கு வசதி அமைத்துத் தருமாறு ஊராட்சி மன்றத் தலைவருக்கு விண்ணப்பம் எழுதுக,

**(உமது முகவரி: மா.செந்தில் / மா. செல்வி, எண் 130, காந்தி தெரு, புதுக்கோட்டை-01)**